பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 12 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- தமிழகததில் ரயில்வே திட்டப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- அரசியல் சாசன சிற்பி அம்பேத்கர் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பேசிய கருத்தை காங்கிரஸ் கட்சி திரித்துக் கூறி வருவதாக மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- சிறுபான்மையினரின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- பஹ்ரைனில் கைது செய்யப்பட்ட நெல்லை மாவட்ட மீனவர்கள் 28 பேர் மத்திய அரசின் முயற்சியால் முன்கூட்டியே விடுவிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.,
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

தமிழகத்தில் ரயில்வே திட்டப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு எழுத்து மூலம் அவர் அளித்துள்ள பதிலில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் ஏழாயிரத்து 153 கோடி ரூபாய் மதிப்பில் 665 கிலோ மீட்டர் தூரத்திற்கு 22 வழித்தட பணிகள் நடைபெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதில் பத்து பணிகள் புதிய வழித்தடங்கள் என்றும் ஒன்பது பணிகள் இரட்டை வழித்தடங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில் உள்கட்டமைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட திட்டங்களுக்காக இந்த நிதி ஆண்டில் மட்டும் தமிழகத்திற்கு ஆறாயிரத்து 362 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2009-ஆம் ஆண்டு முதல் 2014-ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் இப்பணிகளுக்காக 879 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தில் இரண்டாயிரத்து 895 கோடி ரூபாய் செலவில் 264 ரயில்வே மேம்பாலங்களும், சுரங்கப்பாதைகளும் கட்டப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதாகவும், திரு அஸிவினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

அரசியல் சாசன சிற்பி அம்பேத்கர் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பேசிய கருத்தை காங்கிரஸ் கட்சி திரித்து கூறி வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைளத்தில் வெளியிட்டுள்ள பதவில், தாம் பேசியது குறித்து திரு அமித்ஷா தெளிவாக விளக்கம் அளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணல் அம்பேத்கருக்கு உரிய மரியாதை வழங்காதது காங்கிரஸ் கட்சிதான் என்று அவர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சியின்போது அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படவில்லை என்றும், பிஜேபி ஆதரவுடனான அரசு மத்தியில் ஆட்சியில் இருந்தபோதுதான் அவருக்கு அந்த விருது வழங்கப்பட்டதாகவும் திரு எல் முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

[]<<<>>>[]

சிறுபான்மையினரின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற சிறுபான்மையினர் தின விழாவில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், மதச்சார்பின்மை கொள்கையை திமுக அரசு தொடர்ந்து பின்பற்றும் என்று கூறினார்.

திமுக ஆட்சிக்காலத்தில் சிறுபான்மையினர் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களை திரு மு க ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) - 47--- செகண்ட்*

[]<<<>>>[]

மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நான் முதல்வன் திட்டம் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 29 இடங்களில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.,

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை நடத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 37 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளதாக திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பொதுவிநியோக திட்டப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிப்பதில் நாட்டிற்கே முன்னோடியாக தமிழகம் திகழ்கிறது என மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அமுதம் அங்காடிகள் மூலம் தொள்ளாயிரத்து 99 ரூபாய் விலையில் 30 மளிகைப் பொருட்கள் அடங்கிய கிறிஸ்துமஸ் புத்தாண்டு சிறப்பு தொகுப்பு விற்பனை திட்டத்தை அவர் நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

ஆயிரத்து 392 ரூபாய் மதிப்புள்ள இந்த பொருட்கள் சலுகை விலையில் விற்பனை செய்யப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 23 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் தெரிவித்துள்ளார்.,

ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலைய தொடக்க விழாவில் பேசிய அவர், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் கூடுதலாக 13 ஆயிரம் மாணவ மாணவிகள் பயன்பெறுவதாகக் கூறினார்.

இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவிகளில் 90 சதவீதம் பேர் வேலைவாய்ப்பை பெறுவதாகவும் திரு சி வி கணேசன் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பஹ்ரைனில் கைது செய்யப்பட்ட நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 28 மீனவர்களும் மத்திய அரசியின் முயற்சியால் முன்கூட்டியே விடுவிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் கைது செய்யப்பட்ட இந்த மீனவர்களுக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஆறு மாத காலம் சிறை தண்டனை விதித்தது.

அவர்களை விடுவிக்க அங்குள்ள இந்திய தூதரகம் மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக மீனவர்களின் தண்டனை குறைக்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக வெளியுறவத்துறை தெரிவித்துள்ளது.,

28 மீனவர்களும் நாடு திரும்பியுள்ளதாக பஹ்ரைனில் உள்ள இந்திய தூதர் திரு வினோத் கே ஜாக்கப் தெரிவித்துள்ளார்.

இதனிடையே விடுவிக்கப்பட்ட மீனவர்கள் நேற்று மாலை திருவனந்தபுரம் விமான நிலையம் வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களை சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு வரவேற்று சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான ஆட்.சியில் நாடு அனைத்துத் துறைகளிலும் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கோவை தனிச் சிறப்பு வாய்ந்த நகரமாக உருவெடுத்துள்ளதாகவும், தொழில் துறையில் சிறந்து விளங்குவதாகவும் தெரிவித்தார்.

நாடு முழுவதும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக திரு அண்ணாமலை கூறினார்.

முன்னதாக விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரை பிஜேபி தொடர்ந்து கௌரவித்து வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதகாவும், மாநில அரசு அதனை கட்டுப்படுத்த தவறிவிட்டதாகவும் திரு அண்ணாமலை குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்களில் இன்றும் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யக்கூடும் என்றும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நேற்று முதல் சென்னை நகரில் பெரும்பாலான பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

[]<<<>>>[]

புற்றுநோய்க்கான தடுப்பூசியை கண்டுபிடித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

பாரத் மாலா திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை ஆயிரத்து 185 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

நாட்டில் 779 மாவட்டங்களில் ஐந்து-ஜி சேவைகள் கிடைப்பதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு பெம்மசானி சந்திர சேகர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கடற்படை ஆய்வுக் கப்பலான ஐஎன்எஸ் நிர்தேஷக், விசாகப்பட்டினத்தில் மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு சஞ்சய்சேத் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கடற்படையில் இணைக்கப்பட்டது.

[]<<<>>>[]

தமிழகத்தில் தாட்கோ மூலம் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு கொண்டுவரப்படும் மருத்துவக் கழிவுகளை தடுக்க எல்லையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக தென்காசி மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டம் வைப்பாறு வடிநில பகுதிகளில் மழையின் போது விளைநிலங்கள் பாதிக்கப்படாத வகையில் நிரந்தர தடுப்பு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் அரசின் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் நடைபெற்றது.

[]<<<>>>[]

சென்னை சைதாப்பேட்டை பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளை அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 18 வயது நிரம்பியவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக கல்லூரி மாணவிகளுக்கான விழிப்புணர்வு வினாடி வினாப் போட்டி சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

[]<<<>>>[]

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் பெங்கால் அணிக்கு எதிரா ஆட்டத்தில் தமிழக அணி 60-29 என்ற புள்ளி கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் பட்னா அணி, தெலுகு அணியை வென்றது.

[]<<<>>>[]